Registered with the Registrar
of Newspapers for India under
No. 10410

Registered No. SSP/PY/44/2015-17
WPP No. TN/PMG(CCR)/WPP-88/2015-17
Dated : 6-10-2017
Price : ₹ 6-00

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்
# La Gazette de L' État de Poudouchéry
# The Gazette of Puducherry

**PART - I**

| **சிறப்பு வெளியீடு** | **EXTRAORDINAIRE** | **EXTRAORDINARY** |
|---|---|---|
| *அதிகாரம் பெற்ற வெளியீடு* | Publiée par Autorité | Published by Authority |
| *விலை :* ₹ 6-00 | Prix : ₹ 6-00 | Price : ₹ 6-00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **வெள்ளிக்கிழமை** | **2017 ௵** | **அக்டோபர் ௴** | **6 ௳** |
| **No.** | **157** | **Poudouchéry** | **Vendredi** | **6** | **Octobre** | **2017 (14 Asvina 1939)** |
| **No.** | | **Puducherry** | **Friday** | **6th** | **October** | **2017** |

புதுச்சேரி அரசு

**தலைமைச் செயலகம்**
**(வேளாண்மை மற்றும் வனங்கள்)**

அறிவிக்கை

மத்திய தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தினைச் சார்ந்த மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை வழங்கும் மின் மாவட்டம் என்ற திட்டத்தின் கீழ் அனைவருக்கும், அரசு சேவைகளை இணையத்தளம் வாயிலாக, வெளிப்படையாக விரைந்து மற்றும் திறம்பட வழங்கும் நோக்கோடு, புதுச்சேரி தகவல் தொழில்நுட்பத்துறை மூலம், புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் செயல்படுத்த உள்ளது.

பயன் பெறுவோரின் சாகுபடி விபரங்களை கணினி மயமாக்குதல்/விவசாயிகளுக்கு ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வழங்குதல், இடுபொருட்கள் விநியோகத்திற்கு மின் அனுமதி வழங்கல், வேளாண்மை தோட்டக்கலை வேளாண் பொறியியல், நீர்ப்பாசனத் திட்டங்களில் பிந்தைய சாகுபடி மானியங்கள் வழங்குதல், புதுச்சேரி விவசாய தொழிலாளர்களின் நலச் சங்கத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களின் விபரங்களை கணினி மயமாக்குதல் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஸ்மார்ட் அடையாள அட்டை வழங்குதல் ஆகியவை இந்த மின் மாவட்டம் திட்டத்தில் செயல்படுத்த புதுச்சேரி வேளாண் துறையால் கண்டறியப்பட்டுள்ள சேவைகளாகும்.

கண்டறியப்பட்டுள்ள சேவைகளை திறம்பட செயல்படுத்தவும், திட்டத்தினை அமல்படுத்தும் இலக்கினை அடையவும், துறையின் சேவை வழங்கல் முறைகளை நடைமுறைக்கு ஏற்ப மாற்றி அமைத்திடவும், துறையினிடையே மற்றும் துறைகளுக்கிடையே உண்டான ஒருங்கிணைப்பினை ஏதுவாக அமைக்கவும், மின் மாவட்ட திட்ட செயல்பாட்டிற்கு இணக்கமான களம் உருவாக்கவும், தற்போதைய செயல்முறைகளை மாற்றி அமைத்திட அவசியமாகின்றது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள வேளாண் நில விபரங்களை கணினி மயமாக்குதல் அவசியமானது மட்டுமல்லாமல், இதர சேவைகளை வழங்குவதற்கும் ஓர் தளமாகவும் அமைய உள்ளது. ஆனால், வேளாண் நில விபரங்களை கணினி மயமாக்க மற்றும் ஸ்மார்ட் விவசாய அடையாள அட்டை வழங்குதல் ஆகியவற்றிற்கு வேளாண் நில விபரங்களை புதியதாக கணக்கெடுப்பது மேற்கொள்ளப்பட உள்ளது. இக்கணக்கெடுப்பில் விவசாயிகளின் பெயர், நில அளவு மற்றும் அமைந்துள்ள கிராமம் போன்ற பலதரப்பட்ட விபரங்களும் சேகரிப்பதோடு மத்திய அரசின் பல்வேறு மானியத்தில் பயன் பெறுபவரின் அடையாளங்களை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ளது போல், வேளாண் மானிய சேவைகளிலும் ஆதார் எண் இணைக்கப்பட உள்ளது. ஸ்மார்ட் விவசாய அடையாள அட்டை வழங்குதலின் நடைமுறைகளும் சட்ட வரம்பிற்கு உட்படுத்தபட்டு, உண்மையான விவசாயியின் நலன்களையும், அரசின் நலனையும் காக்கும் பொருட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

நில விபரங்களை கணினி மயமாக்குவதற்குத் தேவையான விபரங்களை பெறுதல், சேவைகளை வழங்குதல், பயன் பெறுவோர் சேவைகளை பெறுவதற்குண்டான கால வரம்பு சேவைகளை, வழங்குதலில் உள்ள கால வரம்பு, அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு பணிகளை குறியிட்டு அளித்தல், வழிகாட்டுதல்களை கடைபிடிக்க தவறும் பட்சத்தில் பொறுப்புகளை சுமத்தல், சேவைகளை அமல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் அவ்வப்பொழுது சீர் நோக்குதல் ஆகியவற்றை சீராக செயல்படுத்திட துறை உத்தேசித்துள்ளது.

அதன்வழி, மாண்புமிகு துணைநிலை ஆளுநர், வேளாண் துறையின் மின் சேவைகளை செயல்படுத்தவும், அதன் பொருட்டு ஸ்மார்ட் விவசாய அடையாள அட்டை மற்றும் இதர மானிய சேவைகள் வழங்குதலுக்குண்டான வழிகாட்டுதல் கொண்ட, பின்வரும் அறிவிக்கையினை இந்த அரசாணையின் இணைப்புகளில் விவரித்துள்ளவாறு வெளியிட இசைந்துள்ளார்.

நிதித்துறையின் 03-06-2016 தேதியிட்ட கோப்பு எண் 1334/F5/A3 அனுமதியுடன் வெளியிடப்படுகின்றது.

(துணைநிலை ஆளுநர் அவர்களின் ஆணைப்படி)

*புதுச்சேரி, 2017 ஆம் அக்டோபர் மீ 9 ஆ.*

**N. காந்திராஜன்,**
அரசு சார்பு செயலர்.
வேளாண்மை மற்றும் வனங்கள்.

இணைப்பு-I

**மின் மாவட்ட திட்டத்தின்கீழ் விவசாயி ஸ்மார்ட் அடையாள அட்டை மற்றும் சேவைகள் வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள்**

1. வேளாண் கூடுதல் இயக்குநர் (ப.வ.தொ.த.), புதுச்சேரி; வேளாண் கூடுதல் இயக்குநர், காரைக்கால்; வேளாண் துணை இயக்குநர், ஏனாம் மற்றும் வேளாண் துணை இயக்குநர், மாஹி ஆகியோர், முறையே, புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் மற்றும் மாஹி பிராந்தியங்களில், அந்தந்த அதிகார வரம்பிற்குட்பட்ட அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில், ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வழங்கிட பதிவு செய்யும் அதிகாரிகளாவர்.

2. புதுச்சேரி வேளாண்துறையின் எந்த திட்டத்தினையும், பயன் பெறுவோர்க்கு வழங்கிட, ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வழங்குவது கட்டாயமாகும்.

3. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை பெற பதிவு செய்திட, பயன்பெறுவோர், இணைப்பு 2-ல் கண்டுள்ளபடி விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

4. சொந்தமாக நிலம் வைத்திருந்து சாகுபடி செய்வோர், பதிவு குத்தகைச் சாகுபடி செய்வோர், வழிப்பாட்டு தலங்களுக்கு சொந்தமான நிலங்களில் சாகுபடி செய்வோருக்கு மட்டுமே ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வழங்கப்படும்.

5. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வழங்கும் அதிகாரிகள், பயன் பெறுவோர், பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பித்தலை உறுதிசெய்ய வேண்டும்.

அ. சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (வெள்ளை அல்லது வெளிர் நிற பின்னணியில்).

ஆ. சுய சான்றளிக்கப்பட்ட நில ஆவணயத்தின் நகல்.

இ. சுய சான்றளிக்கப்பட்ட புதுச்சேரி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையினரால் வழங்கப்பட்ட அடங்கல் நகல்.

ஈ. சாகுப்படிக்கான நிலம் கூட்டுச் சொத்தாக இருப்பின், மற்ற குடும்ப உறுப்பினர்களின் சம்மதம் தெரிவிக்கும் வகையில் ஒரு நோட்டரி உறுதிச்சான்று.

உ. வழிபாட்டு தலங்களின் நிலமாக இருப்பின், அதனை நிர்வகிக்கும் தகுதி பெற்ற நபரிடமிருந்து ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை பெற பதிவு செய்யும் விண்ணப்பத்தின் இணைப்பில் கண்டுள்ளபடி சுய சான்றளிக்கப்பட்ட அனுமதி கடிதம்.

ஊ. சுய சான்றளிக்கப்பட்ட குத்தகை ஒப்பந்தம்-குத்தகை பதிவு செய்யப்படாத பட்சத்தில், ரூபாய் 25 மதிப்புள்ள முத்திரைத்தாளில், நோட்டரிமுன் கையொப்பமிடப்பட்ட ஒரு வருட காலத்திற்கு குறைவான குத்தகை ஒப்பந்தம்; அத்தகைய குத்தகை ஒப்பந்தம் குத்தகை முடியும் வரை புதுப்பிக்கப்பட வேண்டும்; குத்தகை பதிவு செய்யப்படும் பட்சத்தில், புதுச்சேரி குத்தகை சாகுபடி சட்டம், 1970-ன் பிரிவு 7-ன் படி பதிவு செய்யப்பட்ட குத்தகைப் பத்திர நகல் குத்தகைக்கு விடுபவரின் பெயரில் ஏற்கெனவே ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை ஏதேனும் வழங்கப்பட்டிருந்தால் அந்த எண் குத்தகைப் பதிவுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். திட்ட வரையறைகளின்படி, மானியம் பெற சொந்த நிலம் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்று இருப்பின், இந்த குத்தகை விதிகள் பொருந்தாது.

எ. சுய சான்றளிக்கப்பட்ட நில அளவீடு மற்றும் பதிவேடுகள் துறையின் நில வரைபட நகல்.

ஏ. நிலத்தின் இருப்பிடத்தினை எளிதாக அடையாளம் காண, சுய சான்றளிக்கப்பட்ட நில வரைபடம்.

ஐ. சுய சான்றளிக்கப்பட்ட ஆதார் அட்டையின் நகல். (இல்லையெனில், பயன் பெறுவோர், ஆதார் நிரந்தர பதிவு மையங்கள்மூலம் ஆதார் எண் பெற விண்ணப்பித்து அதன் பதிவு எண்ணை தரவும்).

(சமர்ப்பிக்கப்படும் நகல்களின் உண்மையினை அறிய அதற்குண்டான அசல் பதிவுகளை கோரும் பட்சத்தில் அவற்றினை சமர்ப்பிக்க வேண்டும்).

6. உட்பிரிவுகள் 5(அ), (ஆ), (இ), (ஈ), (எ), (ஏ) மற்றும் (ஐ) நிரந்தரமாக நிலம் வைத்திருந்து சாகுபடி செய்வோருக்கு பொருந்தும்; உட்பிரிவுகள் 5(அ), (இ), (ஊ), (எ), (ஏ) மற்றும் (ஐ) குத்தகைக்கு சாகுபடி செய்வோருக்கு பொருந்தும்; 5 (அ) (உ), (எ), (ஏ), மற்றும் (ஐ) ஆகியவை வழிபாட்டு தலங்களின் நிலங்களின் சாகுபடி செய்பவர்க்கு பொருந்தும்.

7. சொந்தமாக நிலம் வைத்திருப்போர், தன் நிலத்தை, மூன்றாம் நபருக்கு சாகுபடி செய்வதற்கோ அல்லது வேறு ஏதேனும் காரணத்திற்காகவோ கொடுத்ததன் மூலம், அதனை அந்நியமாக்கி இருந்தால், அதற்கேற்றார்போல் அவர் தம் ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ தற்காலிக இடைநீக்கம் செய்யப்பட்டுவிடும்.

8. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டைக்கான பதிவிற்காக, பயனாளிகளால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள், பதிவு அதிகாரிகள் அல்லது அவரது பரிந்துரையின் பேரில் வேளாண் அதிகாரி தகுதிக்குத் குறையாத ஒரு அதிகாரியின் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

9. பதிவு அதிகாரிகள், விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை, தேவைப்படின், அதன் நம்பகத்தன்மையினை சோதிக்கும் பொருட்டு, சம்மந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளுக்கு அனுப்பி சரிபார்க்கும் உரிமை உண்டு.

10. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை பெறுவதற்காக பதிவு செய்யும் ஓர் பயனாளி, யூனியன் பிரதேசத்தின் பல இடங்களில் நிலம் வைத்திருப்பின், அவர் சாகுபடி செய்யும் அனைத்து நிலங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டைக்கே அவர் தகுதியுடையவராவார். மேலும், உரிமையாளர் அவர் ஒருவரே என்பதால், அவரது அனைத்து நிலங்களின் மொத்த பரப்பளவு ஒன்றாக கருத்தில் கொண்டே கருதப்பட்டு சிறு/குறு/பெரு விவசாயி என்ற அவரின் தகுதி நிர்ணயம் செய்யப்படும்.

11. நிரந்தரமாக நிலம் வைத்திருப்போருக்கு வழங்கப்படும் ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை, அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். அதன் பிறகு அந்த அடையாள அட்டை புதுப்பிக்கப்பட வேண்டும் மற்றும் புதுப்பிப்பது சம்பந்தப்பட்ட பயனாளியின் பொறுப்பாகும்.

12. குத்தகை நிலத்தில் சாகுபடி செய்வோர்க்கு வழங்கப்படும் ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கோ அல்லது குத்தகை காலத்திற்கோ, இவற்றில் எது அதிகமோ அதற்கு செல்லுபடியாகும். அதன் பிறகு அந்த அடையாள அட்டை புதுப்பிக்கப்பட வேண்டும் மற்றும் புதுப்பிப்பது சம்பந்தப்பட்ட பயனாளியின் பொறுப்பாகும்.

13. பயனாளி, சொந்த நிலம் மற்றும் குத்தகை நிலம் வைத்திருக்கும் பட்சத்தில் மேலே 10-ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளபடி ஒரே ஒரு ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை மட்டுமே வழங்கப்பட்டாலும், வழங்கப்படும். இடுபொருட்கள்/பண உதவி/நிவாரணங்கள் ஆகியவை மேலே 11, 12 உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள அடையாள அட்டையின் காலவரையறைக்கு உட்பட்டதாகும்.

14. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை காலாவதியாகும் காலத்திற்கு முன்பே புதுப்பிக்கப்படும்பட்சத்தில் அது தொடர்ச்சியாக கருதப்படும். காலாவதியான பின் புதுப்பிக்கப்படும்பட்சத்தில், அது புதுப்பிக்கப்படும் தேதியிலிருந்து மட்டுமே அமலுக்கு வரும்.

15. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டையினை புதுப்பிக்க தவறும் பட்சத்தில் அது தானாகவே காலாவதி ஆகிவிடும். புதுப்பிக்கும்வரை பயன்பெறுவோர் துறையிடமிருந்து எந்த ஒரு நிலையிலும் உதவிக்கோரும் உரிமை கிடையாது.

16. தகவல் சேவைகளைத் தவிர மற்ற நிதி சம்பந்தப்பட்ட சேவைகள் அனைத்தும், எந்த ஒரு பயனாளிக்கும் விதிகளில் இருந்து விலக்கு இருந்தால் தவிர, ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை இல்லாமல் வழங்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டியது அந்தந்த அலுவலக தலைவரின் பொறுப்பாகும். விதிகளில் விலக்கு/ தளர்வு அளிக்கும் அதிகாரம் துறைத்தலைவருக்கும் மட்டுமே உண்டு. மற்றும் துறைத்தலைவர் சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரி மற்றும் பயனாளி ஆகிய இருவரிடமும் முறையான விசாரணை நடத்திய பிறகு, விதிகளில் இருந்து விலக்கு/தளர்வு ஏன் அளிக்கப்பட்டது என பதிவு செய்தல் அவசியம். அப்பதிவினை வலைதளத்தில் வெளியிட வகை செய்யும் கடமை, பதிவு அதிகாரியினை சார்ந்ததாகும். துறைத்தலைவரால், வழங்கப்பட்ட விலக்கு/தளர்வு அரசு செயலரின் (வேளாண்மை) ஒப்புதலுக்குட்பட்டதாகும். அந்த கோப்புகளை அரசு செயலரிடம் (வேளாண்மை) சமர்ப்பித்து ஒப்புதல் பெறுவது சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரியின் கடமையாகும்.

17. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை இல்லாமல், ஏதாவது சேவைகள், எந்த ஒரு பயனாளிக்கும் வழங்கப்பட்டு இருப்பின், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும், விதி மீறலுக்கு சம பொறுப்பாவார்கள்.

18. பொதுவாக, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைச்சாகுபடியில், சாகுபடிக்கு பிந்தைய மானியங்களை பெற பயனாளிகள், சாகுபடி செய்திருக்கும் பயிர்களை விதைத்த அல்லது நடவு செய்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், மானியம் பெற பதிவு செய்தல் கட்டாயமாகும். முப்பது நாட்கள் கடந்து, ஆனால், அறுபது நாட்களை கடக்காத பட்சத்தில் அந்த பதிவை வேளாண்மை துணை இயக்குநர் அங்கீகரிக்க வேண்டும். பதிவுக் காலம் அறுபது நாட்களைத் கடந்து, ஆனால், அறுவடைக்கு முன்னதாகவும் இருப்பின், அவ்வகை பதிவினை துறைத்தலைவர் அங்கீகரிக்க வேண்டும். குத்தகை சாகுபடியாக இருக்கும் பட்சத்தில், மானியத்திற்காக பதிவு செய்யும் நேரத்தில், குத்தகை காலம் அந்த பயிரின் அறுவடைக் காலத்திற்கு ஏற்ப இருத்தல் வேண்டும். மானியம் வேண்டும் பட்சத்தில் அந்த குத்தகையினை நீட்டிப்பது குத்தகைத்தாரரின் கடமையாகும்.

19. வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பிரிவுகள் சம்பந்தப்பட்ட அனைத்து அறுவடைக்கு பிந்தைய மானியங்களிலும், பயனாளி, மானியம் பெற சாகுபடி செய்திருக்கும் பயிரினை பதிவு செய்யாது அறுவடை முடித்து இருப்பின், அவர் எந்த ஒரு சூழ்நிலையிலும் அறுவடைக்கு பிந்தைய மானியங்கள் கோர உரிமை இல்லை.

20. எந்த ஒரு பயனாளிக்கும், அவர் தம் சாகுபடி செய்யும் முக்கியப் பயிரின் விஸ்தீரணம் மட்டுமே விதைத்த/சாகுபடி செய்ததாக பதிவு செய்ய வரையறுக்கப்படும். ஊடுபயிர்/வரப்பு பயிர்களின் விஸ்தீரணம், பகுதி பதிவு செய்யப்பட்ட மொத்த முக்கியப்

பயிரின் விஸ்தீரணத்தில் அடங்கி நிற்கும். ஆனால், வேளாண் இடுபொருட்கள் மற்றும் அதற்குண்டான அறுவடைக்கு பிந்தைய மானியங்கள் முக்கியப் பயிர்களுக்கும் மற்றும் வரப்பு ஊடுபயிர்களுக்கும் தனித்தனியாக வழங்க கருத்தில்கொள்ளப்படும்.

21. அனைத்து அறுவடைக்கு பிந்தைய மானியங்களுக்கும் பயனாளிகளால் பதிவு செய்யப்பட்ட விபரங்களை ஆய்வு செய்வது சம்பந்தப்பட்ட வேளாண் அதிகாரிகள்/ வேளாண் அதிகாரிகள் (வே.பொ.) பொறுப்பாகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளின்கீழ் பணிபுரியும் களப்பணியாளர்களை அத்தகைய சரிபார்த்தல்களுக்கு உட்படுத்தப்படுத்திக்கொள்ளலாம்.

22. உலக இடங்காணல் அமைப்பு (GPS) கருவி பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட பயிர்களின் சாகுபடி பரப்பளவினை கணக்கீடு செய்ய அனுமதி உண்டு. பயனாளிகள் அத்தகைய பரப்பளவு கணக்கீட்டின் மீது வாதம் கோர முடியாது.

23. சேவைகள் வழங்கப்படும் பொழுது, மின் மாவட்ட மென்பொருள் மூலம் கொடுக்கப்படும் செய்திகள், அனைத்து காரியங்களுக்கும் அதிகார பூர்வமான செய்தியாக கருதப்படும்.

24. எந்த ஒரு பயனாளியினாலும், அவர் தம் சேவை பரிவர்த்தனைகள் அல்லது மற்ற பயனாளிகளின் சேவை பரிவர்த்தனைகள் பற்றிய தொகுப்பினை, பொது சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது இணையதளம் மூலமாகவோ பதவிறக்கம் செய்த விபரங்கள் அனைத்தும் அதிகார்பூர்வமான தகவல்களாக கருதப்படும்.

25. இங்கு குறிப்பிட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றத்தவறும்பட்சத்தில், பயனாளிகள் பெற்ற பயன்களை பறிமுதல் செய்யவும், பயனாளிகளிடமிருந்து செலவுகளை மீட்கவும், அதுமட்டுமின்றி சம்பந்தப்பட்ட பயனாளி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீதும் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளின்கீழ் வழக்கு தொடரவும் வழிவகுக்கும்.

26. மின் மாவட்ட திட்டத்தின் கீழான சேவைகளை இயக்க, மென்பொருளில் தனித்தனி உள்நுழைவு சான்றுகள் அதிகாரிகளுக்கு கொடுக்கப்படுவதால், கடவு வார்த்தைகளை பத்திரப்படுத்திக்கொள்வது அவரவர் கடமையாகும். அவர்களது கணிப்பொறியில், அவர் தம் உள்நுழைவு சான்றுகளை பயன்படுத்தி இயக்க, மற்றவர்களை ஊக்குவிக்க கூடாது என அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு தவறி அதன் மூலம் ஏதாவது பிரச்சினை எழுமாயின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளே பொறுப்பாவார். மேலும், மின் மாவட்ட மென்பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் சேவைகளை வழங்குவது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

27. ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியாக வகுக்கப்பட்டுள்ள தகுதியினை இந்த வழிகாட்டுதலுடன் இணைத்துப்பார்த்து, அத்திட்டங்களின் செயல்முறைகள், இங்கு குறிப்பிட்டுள்ள அடிப்படை வழிகாட்டுதல்களுக்கு ஒட்டியும் அவற்றிற்கு முரண்பாடுகள் இல்லாதவாறு உறுதிசெய்துகொள்ளுதல் அவசியம். மின் மாவட்ட மென்பொருள் மூலம் சேவைகள் வழங்கிட வழக்கமான சேவை வழங்கல் முறைகளில் பொருத்தமான மாறுதல்கள் வேண்டின், அவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

28. இந்த வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணித்து அதனை உறுதிப்படுத்துவது அந்தந்த அலுவலகத் தலைமையின் பொறுப்பாகும்.

29. பொதுவாக, ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டையினை பயனாளிகளுக்கு வழங்குவது விவசாய சேவைகளை, வெளிப்படையான மற்றும் பொறுப்பான முறையில் விநியோகிக்க மட்டுமே ஆகும். குத்தகைத்தாரர்களை பொறுத்தமட்டில், ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை கொண்டுள்ளார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, வேளாண்மை மேற்கொள்ளும் நிலத்தின் மீதும் அதற்கான சேவைகள் வழங்கியதற்காகவும் எந்த விதத்திலும் உரிமை அளித்ததாக கருதப்படமாட்டாது.

30. துறையின் சேவைகளுக்கும், துறையால் வழங்கப்படும் இடுபொருட்கள்/பண உதவிகள், ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வைத்திருப்போருக்கு மட்டுமே உண்டு.

31. அடையாள அட்டை தொலைந்து போனாலோ அல்லது பகுதியாகவோ அல்லது முழுவதும் சேதமடைந்திருந்திருந்தாலோ அல்லது மின் உபயோகத்திற்கு பயன்படாது போனாலோ சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட பயனாளியின் கடமையாகும். அவர் தம் ரூபாய் 50.00 (ரூபாய் ஐம்பது மட்டும்) அபராத கட்டணமாக செலுத்தும் பட்சத்தில் ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டையின் நகலைப் பெற தகுதியுடையவராவார்.

32. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வைத்திருப்போர், வேளாண் இடுபொருட்கள்/பண உதவிகள்/நிவாரணம் ஆகியவற்றை பயிர் செய்யும் காலம் முடிவடைவதற்கு முன்பு அவர்தம் உயிர் நீக்கும் பட்சத்தில், அந்தப் பயன்களை மற்றவர்கள் பெற, ஒருவரை நியமிக்கலாம். அந்தத் நியமனம் மாற்றத்தக்கது. அவ்வாறு மாற்றம் செய்ய வேண்டுமாயின் ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வைத்திருப்போர், அதன் காலவரையற்றை முடிவதற்கு முன்பாக வரையறுக்கப்பட்டுள்ள படிவத்தில் சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரியிடம் எழுத்து பூர்வமாக சமர்ப்பிக்க வேண்டும்.

33. அவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர், இங்கு குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி ஒரு தனி விண்ணப்பம் சமர்ப்பித்தால், ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டையில் மீதமுள்ள காலத்திற்கு, அவரின் பெயருக்கு மாற்றித்தரப்படும்.

34. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை வைத்திருப்போருக்கு தெரிவிக்காமல், இந்த வழிகாட்டுதல்களை, பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ திருத்தியமைக்கும் உரிமை துறைக்கு உண்டு.

35. இங்கே அறிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள், புதுச்சேரி அரசிடமிருந்து அல்லது இந்திய அரசிடமிருந்து நிதி பெறப்பட்டு, வேளாண் துறையால் நேரடியாக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும். மற்ற அலுவலகங்கள்/சங்கங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு, குறிப்பிட்டு அறிவித்தால் தவிர வலியுறுத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை.

36. ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டைதாரர், ஸ்மார்ட் விவசாயி அடையாள அட்டை அல்லது சேவை வழங்குவதில் உள்ள குறைகளை தெரிவிக்கும் பொருட்டு, துறைத்தலைவர் அதனை நிவர்த்திக்கும் அதிகாரம் பெற்றவர் ஆவார். சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரி மற்றும் புகார் தெரிவித்த நபரிடமும் முறையான விசாரணைக்குப்பின், துறைத்தலைவர் இந்த வழிக்காட்டுதல்களின் வரம்பிற்கு உட்பட்டு, குறைகளை நிவர்த்தி செய்து, தமது கருத்தினை எழுத்துப் பூர்வமாக பதிவு செய்தல் அவசியம். அந்த பதிவினை துறையின் இணையதளத்தில் வெளியிட ஏற்பாடு செய்வது, சம்பந்தப்பட்ட பதிவு அதிகாரியின் கடமையாகும்.

37. திட்டத்தினை செயல்படுத்தலில் ஏதாவது கருத்து வேறுபாடு அல்லது வழிமுறைகளை கடைபிடிக்கும் முறை அல்லது துறைத்தலைவரால் அளிக்கப்பட்ட தளர்வு/விலக்கு/நிவர்த்தி மீதானவற்றில் ஆட்சேபணை இருப்பின், புதுச்சேரி அரசின் வேளாண்மைச் செயலரின் முடிவே இறுதியாகும்.

38. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களையும், சேவை விநியோக முறைகளையும் பயன்பெறுவோர் தெரிந்துகொள்ள, எடுத்துரைக்க உறுதி செய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

38. இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள், மறுபரிசீலனை அல்லது நீக்கப்படும் வரை அமலில் இருக்கும்

40. புதுச்சேரி அரசின் தகவல் தொழில்நுட்ப துறை அறிவிக்கும் நாள் முதல், மின் மாவட்ட திட்டத்தின்கீழ் அமல்படுத்தப்படும் சேவைகள் அனைத்தும் கண்டிப்பாக இணையத்தின் மூலமாக வழங்க வேண்டும்.

41. இங்கே பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் இனிவரும் காலத்திற்கு உடனடியாக அமலுக்கு வருகின்றது.

online publication at **"http://styandptg.puducherry.gov.in"**
Government Central Press
Directorate of Stationery and Printing
Puducherry - 605 009